2014 – இதழ் 4

இலவசம்

உள்ளான மனிதன்

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்த்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17)

E-COPY

THE INNER MAN

MONTHLY FREE ISSUE – 2014 ISSUE 4

PRODUCED & PRESENTED BY GTAC - FIND E-COPY AT THE GTAC WEBSITE

E-COPY

உள்ளே.........

எங்கே போகின்றேன்?.. 02

காரணமில்லாத காயங்கள்.................................. 05

எல்லா நதிகளும் ஒரு கடலிலே சேரும் 09

நீதிமானின் சந்ததி!..13

மறுபிறப்பு அனுபவம் உண்டா? 15

Game(s); Word Puzzle

உள்ளான மனிதன்

e-mail: innerman.info@yahoo.com

☎ 416.613.2909

எங்கே போகின்றேன்?

~ போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

“நான் போயிட்டு வாரேன்” என்னும் வார்த்தைகள் வயது வித்தியாசமின்றி எல்லோராலும் சொல்லப்படுகின்ற வார்த்தைகளாகும். சொல்லிவிட்டு புறப்படுதல் எல்லா மனிதர்களின் வாழ்விலும் மொழி, கலச்சார வேறுபாடின்றி கைக்கொள்ளப்படும் பண்பாகும். வீட்டினுள் உள்ளவர்களுக்கு போகுமிடத்தை சொல்லிப் போகுதல் ஓர் வழக்கமான செயலாகும். பிள்ளைகள் பெற்றோரிடத்திலும், பெற்றோர் பிள்ளைகளிடத்திலும் சொல்லிப் போவார்கள். சிலர் தாங்கள் புறப்படும் போது யாராகிலும் எங்கே போகின்றீர்கள் என்று கேட்பதை அபசகுனமாய் எண்ணுகிறார்கள். இன்னும் பலர் தங்கள் வாழ்க்கையைக் குறித்து பேசும் போது நான் எங்கே போகிறேன் என்று எனக்குத் தெரியாது என்பார்கள். வேறு சிலர் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை என்பார்கள். இதைப்பற்றி என்ன சொல்லுவோம். குறிக்கோள் இல்லாத மனித வாழ்வு பிடிபட்டு அழிக்கப்படுகின்ற புத்தியில்லாத மிருகத்துக்கு ஒப்பாகாதோ?

வாழ்வில் இலட்ச்சியத்தை அடைய குறிக்கோள் இருக்க வேண்டும். அதை ஒருவர் எங்கே கற்றுக்கொள்ள முடியும்? யார்தான் அதை சொல்லிக்கொடுப்பார்கள்? அவர்களை நம்ப முடியுமா? எண்ணங்களின் ஊற்றில் உழல்பவர்களுண்டு ஆனால் அவர்களின் வாழ்வில் இலட் சியம் எதுவும் காணப்படாது. மனிதர்களிடம் இயல்பாக இரக்க சுபாவம் உண்டு. மற்றவர்களுக்கு உண்டாகும் துன்பத்தைக் கண்டு கவலைப்படுவார்கள், உதவிகளையும் செய்வார்கள். இன்னும் சிலருடைய வாழ்க்கையில் துக்கப்படுவது ஓர் பொழுது போக்கு நிகழ்வாயுள்ளது. இவர்கள், தேடி துக்கமான கதைகளை படிப்பார்கள். பின்பு அக்கதாபாத்திரங்ளுக்காகத் துக்கப்படுவார்கள். துக்கமான திரைப்படங்களைப் பார்ப்பார்கள் பின்பு அழுவார்கள். அதைக் குறித்து பேசுவார்கள். இவர்கள் தங்களை இரக்க சுபாவமுள்ளவர்களென்று சொல்லுகின்றார்கள்.

உலகமானது இந்நாட்களில் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைப்பாடுக ளையும் அதைத் தொடர்ந்து அவரது உயிர்த்தெழுதலையும் நினைவு கூறுகின்றது. அவரது மரணத்தை பெரிய வெள்ளி என்றும் (Good Friday), அவரது உயிர்த்தெழுதலை உயிர்த்த ஞாயிறு (Easter Sunday) என்றும் நினைவு கூறுகின்றது. இயேசு மனிதர்களின் பாவங்களை போக்கும் பாவநிவாரண பலியாக உலகிற்கு வந்தார். ‘மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு,

நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.' ஏசாயா 53:4-6 என்று அவரைக்குறித்து அவரது பிறப்பிற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னதாக தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

இயேசுக்கிறிஸ்து எமது பாவங்களுக்காய் சிலுவை சுமந்தார். அது மிகவும் துன்பம் நிறைந்த காட்சி. பார்த்தவர்களை மட்டுமின்றி அதை கேட்பவர்களையும், நினைப்பவர்களையும் உறையச் செய்யும் அகோரக் காட்சி. அவர் சிலுவை சுமந்து சென்ற போது 'திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத்தொடங்குவார்கள். பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்.' லூக்கா 23:27-31 இயேசு, அந்தத் துன்ப காட்சியைக் கண்டு சகிக்க முடியாமல் அழுதவர்களை நோக்கி 'நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' என்றார். அவர்களோ தங்கள் நிலை அறியாதிருந்தார்கள். பிரியமான சகோதரனே சகோதரியே நீ எங்கே போகிறாய்? பிரியமான தகப்பனே தாயே நீ எங்கே போகிறாய்? உன் பிள்ளைகள் எங்கே போகிறார்கள்? இயேசு சொன்னார் 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.' யோவான் 14:6

கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

☎ 416.613.2909

WORD PUZZLE

S	P	I	E	T	H	R	E	E	E	P	S
T	A	O	U	C	S	E	P	R	H	E	N
H	H	W	M	R	D	W	A	S	E	A	O
I	T	I	P	U	N	P	N	L	A	C	I
S	H	N	S	B	U	T	D	O	E	U	S
A	A	F	E	A	O	U	R	H	U	D	S
I	T	O	W	M	W	T	T	R	E	E	E
A	C	R	U	S	H	E	D	C	I	B	R
H	I	N	R	G	I	S	R	F	O	R	G
I	N	E	U	B	E	E	I	W	O	U	S
T	H	O	I	V	I	F	W	N	F	O	N
Y	R	S	I	P	T	W	A	O	U	R	A
B	A	F	E	Y	S	E	C	A	E	P	R
W	S	E	I	T	I	U	Q	I	N	I	T

BUT	HE	WAS	PIERCED	FOR
OUR	TRANSGRESSIONS	HE	WAS	CRUSHED
FOR	OUR	INIQUITIES	THE	PUNISHMENT
THAT	BROUGHT	US	PEACE	WAS
ON	HIM	AND	BY	HIS
WOUNDS	WE	ARE	HEALED	ISAIAH
FIFTY	THREE	FIVE		

காரணமில்லாத காயங்கள்

அமெரிக்காவிலே மிச்சிகன் (Michigan) மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு சிறு நகரத்திலே வாழ்ந்து வந்த 36 வயதுள்ள ஒரு மனிதன், தன்னுடைய மூன்று துப்பாக்கிகள் வெடிக்கலம் செறிவிக்கப்படாத (Not loaded) வேளைகளில் எவ்வளவு பாதுகாப்பானது என்று தன்னுடன் வாழ்ந்து வந்த பெண்மணிக்கு செயல்முறைவிளக்கம் அளிக்க முயன்ற வேளையில் தவறுதலாக வெடிகுண்டு அவர் தலைக்குள் பாய்ந்ததால் அகால மரணமடைந்தார்.

முதல் இரண்டு துப்பாக்கிகளையும் தலையில் வைத்து அதன் பாதுகாப்பை வெற்றிகரமாக விளக்கிய அவர், மூன்றாவது துப்பாக்கியை தலையில் வைத்து சுட்டுக்காண்பிக்கும்போது அதிலிருந்த வேட்டு விடுவிக்கப்பட்டு அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

இது ஒரு தற்கொலை என ஓக்லாண்ட் (Oakland) மாவட்டத்தை சேர்ந்த மருத்துவ பரிசோதகர் கூறியதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவமானது ஞாயிறு மாலை நடைபெற்றது, அன்றைய நாளில், அந் நபர் அதிகமாக மதுபானம் அருந்திக் கொண்டு இருந்தார் என அவருடன் வாழ்ந்த பெண்மணி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தெரிவித்ததாக கூறப்படுகின்றது. (ஆதாரம் Reuters, Feb 25, 2014)

எவ்வளவு மதியீனமான காரியம் இது! மதுபான வெறியில் இருப்பவர் கையில் துப்பாக்கியை கொடுத்தால் இப்படித்தான் இருக்கும் என சொல்லத்தோன்றுகின்றதல்லவா? அப்படியானால், மதுபானத்தில் பிரியம் கொண்டு வெறிகொள்பவர்களிடம் ஒரு குடும்பத்தை நம்பி கொடுக்க முடியுமா? ஒரு மோட்டார் வண்டியை ஓட்டும் படியாக கொடுக்க முடியுமா? ஒரு வேலையை நம்பி கொடுக்க முடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்குத்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திர த்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே: அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்: உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மர த்தட்டிலே படுத்திருகிறவனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை: என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை: நான் அதைப்பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுதும்

விழிப்பேன் என்பாய். (நீதிமொழிகள் 23:29-35) என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

குடி குடியை கெடுக்கும், மதுபானம் அமளிபண்ணும் இவை யாவும் நாங்கள் கண்டு வருகின்ற உண்மையே! மது மயக்கம் மதியீனமான காரியங்களை செய்ய தூண்டும். நான் நேராகத்தான் நடக்கின்றேன், நான் நல்ல சுய அறிவுடன்தான் இருக்கின்றேன் என்று மதுபாதுபான வெறிகொண்டவர்கள் கூறிக்கொள்வார்கள். இன்னும் சிலர் நாங்கள் கட்டுப்பாடுடன்தான் மது அருந்துவோம் எனவும் சமயத்திற்கு ஏற்றபிரகாரம் அவ்வப்போது (Casual Drinkers) குடித்துக்கொள்வோம் என்றும் வேறு சிலர் நாங்கள் முக்கிய நிகழ்வுகளிலும், கொண்டாட்டங்களிலும் மட்டும் (Party-Wise Drinkers) என்று தங்களையே தாங்கள் கௌரவமாக சொல்லிக்கொள்வார்கள். எல்லாம் ஒரு சிறிய ஆரம்பம், மது போதையில் இருக்கும் போது நித குடிகாரர், தற்காலிக குடிகாரர் என்ற வித்தியாசம் ஏதுமில்லை. மதுவெறி ஒருநாள் அமளிசெய்யும்.

புள்ளிவிபரங்களின்படி கனடாவிலே, 80 சதவீதமானோர் மது அருந்துகிறார்கள், இதில் குறிப்பிடதக்க பெண்களும் அடங்குவார்கள். நாகரீகம் என்ற போர்வையிலே தமிழ் பெண்களும் அதிகபடியாக மது அருந்துகிறார்கள். 40 வீதமான வாகன விபத்துக்களுக்கு மதுபானவெறி முக்கிய காரணியாக இருக்கின்றது. 200 க்கும் அதிகமான நோய்கள் மதுபானத்தினால் உண்டாககூடிய வாய்ப்பு உண்டு. சுமார் 14.6 பில்லியன் டொலர்கள் மருத்துவ, சட்ட அமுலாக்கல் மற்றும் வேலைத்தள உற்பத்தித்திறன் இழப்பினாலும் செலவாகின்றது என்று மதிப்பீடப்பட்டுள்ளதாக உளவியல் சுகாதார நிறுவனத்தினால் வெளியிட ப்பட்ட அறிக்கை கூறுகின்றது (ஆதாரம் Toronto Star - Mar 6, 2013).

இரத்தச்சோகை, புற்றுநோய், இரத்தநாடி சம்மந்தமான வியாதிகள், ஈரலரிப்பு, முதுமை மறதி, மன அழுத்தம், வலிப்புத்தாக்கம், வாதரோகம், உயர் குருதி அழுத்தம், நோய் எதிர்ப்பு சக்தி குறைவினால் ஏற்படும் தொற்று நோய்களின் அபாயம், நரம்பு சிதைவு, சமிபாட்டுத்தொகுதியில் ஏற்படும் நோய்கள் ஆகியவை கடும் குடியினால் ஏற்படக்கூடிய நோய்களில் உள்ளடங்கும் (ஆதாரம் WebMD)

மதுபான வெறி, புத்தியீனமான காரியங்களை நடப்பிக்கின்றது. கேலிக்கையாக தாறுமாறான பேச்சுக்களை பேசி, தங்கள் குடும்பங்களில் பிரிவினைகளையும், வேலைத்தளங்களிலே இருந்து வெளியேற்றப்படும் நிலைக்கும் ஆளாகியிருக்கின்றார்கள். பலவித களியாட்டுக்களிலும் பாலியல் வன்முறைகள், மோக பாவம். களவுகள், சண்டைகள் மற்றும் கொலைகளுக்கு கூட மது வெறி இழுத்துச் சென்றுவிடுகின்றது. பலர் மதுபான வெறியுடன் வாகனங்களை செலுத்தி

பிறர் உயிருக்கு பங்கம் விளைவித்து, பலவிதமான விபரீதங்களை மற்றவர்களுடைய வாழ்கையிலும் உண்டு பண்ணிவிடுகின்றார்கள். தங்கள் வாழ்கை படு குழிக்குள் படிப்படியாக இறங்குவதை அறிந்தும் அவ்வழியே செல்லுகின்றார்கள்!

எனக்கு நல்ல வயதாகிவிட்டது இதுவரைக்கும் எந்த பிரச்சனைகளும் எனக்கு வரவில்லை என சிலர் சொல்லிக்கொள்வார்கள், இது ஒரு சௌகரியமான சாட்டுப்போக்கு. உன் சந்ததிக்கு நீ ஒரு நல்ல முன் உதாரணத்தை வைத்து செல்கின்றாய், அது மட்டுமல்ல மதுபானம் அருந்தும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கிய கேடு, புத்திசுயாதீனம் மற்றும் அங்கவீனம் வரும் அபாயம் உண்டு என்பது உறுதிப்படுத்தபட்ட உண்மை. மது அருந்தும் ஆண்களினாலும் பிறக்கும் பிள்ளைகளுக்கு குறைபாடுகள் ஏற்படும் அபாயம் உண்டு என்று அறிக்கைகள் கூறுகின்றது அதனை உறுதிப்படுத்தும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, “நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கின்றீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களா? ” (1 கொரி 3:16)

உன் வீடு ஒரு மதுபான கொட்டகை அல்ல, ஒரு ஜெப வீடாக இருக்க வேண்டும். உன் சரீரம் தேவன் தங்கும் பரிசுத்த ஆலயமாக இருக்கவேண்டும். நீ மதுபான வெறியில் இருக்கும் போது உனக்குள் எப்படி பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்ய முடியும்? உன் வீடு மதுபான களியாட்டில் இருக்கும் போது அது எப்படி ஜெப வீடாக இருக்க முடியும். தேவன் தங்காத இடத்தில் சாத்தான் குடி கொள்ளுவான், சாத்தான் கொல்லவும் அழிக்கவுமே அன்றி வேறொன்றுக்கும் வரான். இன்று எல்லாம் நலம் போல் தோன்றலாம் ஆனால் ஈற்றிலே உன்னை விழுங்கிவிடும். நீ ஏன் காரணமில்லாத காயமடையவேண்டும்?

இன்று ஒரு நற்செய்தி! நீ மதுபானத்திற்கு அடிமையாக இருந்தாலும், அவ்வப்போது குடிப்பவனாக அல்லது குடிப்பவளாக இருந்தாலும். இன்று மனந்திரும்பு! இன்று உன்வாழ்கையை இயேசுவிடம் ஒப்புக்கொடு! எந்தவிதமான பாவக்கட்டோ அல்லது அடிமைத்தனமோ, இயேசுவினால் மாற்றமுடியாத காரியங்கள் ஒன்றுமில்லை. இயேசுவுக்குள் நீ ஒரு சமாதானமான வாழ்வை கண்டடைய முடியும்.

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோமர் 12:1)

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

ஞாயிறு சிறுவர் ஓய்வு நாள் படசாலை

Sunday School .... 9:00 AM

(மாதத்தின் முதல் ஞாயிறு சிறுவர் பாடல் பயிற்ச்சி

First Sunday of the month – Children Choir Practice)

ஞாயிறு காலை ஆராதனை

Sunday Morning Service...10:00 AM

துதியும் ஜெபமும் செவ்வாய் கிழமை மாலை

Worship and Prayers Every Tuesday.................................... 7:30 PM

உபவாச ஜெபமும், வேதப்படிப்பும்
மாதந்தோறும் இரண்டாம் சனிக் கிழமை காலை

Fasting & Prayers

2nd Saturday of the month... 10:00 AM

பெண்கள் ஜெபம்
ஒவ்வொரு வியாழக்கிழமையும்

Prayers – by Ladies

Every Thursdays start at ....8:30 AM

ஜெபம் – தெய்வீக சுகமும் விடுதலையும்
2ம் 4ம் வெள்ளி கிழமைகளில் மாலை

Prayers – Divine Healing and Deliverance

2nd and 4th Fridays..7:30 PM

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, Ontario
(On Midland Avenue, One Block North of Finch)

210–807 சில்வர் ஸ்டார் புலவட்

[மிட்லாண்ட் அவென்யுவில் பின்ச் வீதிக்கு சற்று வடக்கே]

www.gtaCHURCHnet.ca ☎ 416.613.2909

எல்லா நதிகளும் ஒரு கடலிலே சேரும்

ஓடை நதியாகி, நதிகளெல்லாம் கடலிலே சேரும்! சிறு நதிகளை: அருவி, நதிக்கிளை, சிற்றாறு, ஓடை அல்லது சிற்றோடை என்று சொல்வார்கள். சில அருவிகள் நதியுடன் இணையுமுன்னே வறட்சியினால் காய்ந்து போகின்றது. எல்லா நதிகளும் சமுதிரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது: தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும் என பிரசங்கி கூறிகின்றார்.

எல்லா நதிகளும் கடலிலே சேரும்! என்பது பலரும் சொல்லிக் கொள்ளும் கூற்று. இக்கூற்றை பரலோகம் அல்லது மோட்சம் சென்றடைவதற்கு ஒப்பனையாக மனிதர்கள் கூறிக்கொள்வார்கள், அதாவது எல்லா வழிகளும் ஈற்றிலே அங்கு சென்று அடையும் என்று சுலபமாக சொல்லி விடுவார்கள்.

எல்லா நதிகளும் கடலிலே சேரும் என்பது உண்மை! ஆனால் அவை எந்தக் கடலிலே சேரும் என்று இப்பொழுது அறிந்து கொள்வது சலாச்சிறந்தது. இப்பூமியிலே கடல்களை பிரித்து பெயர்வைத்தாலும் எல்லாம் ஒன்றொன்றொன்று இணைந்து தான் உள்ளது. எல்லா சமுத்திரமும் ஒரே நீர்ப்பரப்பு என்று சொல்லலாம் அல்லவா? இவ்வுலகில் அது உண்மை, ஆனால் மறு உலகில் அதில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. இரண்டு வெவ்வேறான கடல்கள் உண்டு:

1. பளிங்குக்கொப்பான ஜீவதண்ணீருள்ள தெளிவான கண்ணாடிக் கடல் (வெளி 4:6, வெளி 22:1)
2. மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்க தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடல் (வெளி 20:10)

நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது? அதுபோல பளிங்குக்கொப்பான ஜீவதண்ணீருள்ள தெளிவான கண்ணாடிக் கடலுக்கும், அக்கினியும் கந்தகமுமான கடலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

ஆம் நீ எங்கு செல்கின்றாய் என்று இப்பொழுதே அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது. காலம் தாழ்த்திய ஞானம் வேண்டாம். இந்த சத்தியத்தை நீ தக்க சமயத்தில் கண்டறிவது உன் ஆத்துமாவை பாதாளத்தில் இருந்து விடுவிக்கும்.

நீ நம்பியிருக்கிற நதி எந்தக் கடலிலே சென்றடையும்?

- ஜீவதண்ணீருள்ள கடலிலா? அல்லது
- அக்கினியும் கந்தகமுமான கடலிலா?

இந்த உண்மையை உன் உயிர் உன் உடலில் இருக்கும் போதும், காலம் கடந்து உன் சிந்தனை ஆற்றல் தணியமுன்னும் நீ இதை நாடித்தேட வேண்டும்.

- பாவ மன்னிப்பின் நிச்சயம் உனக்குண்டா?
- ஆன்மீக இரட்சிப்பு உன்னில் உண்டா?
- தேவசமாதானம் உன் உள்ளத்தில் உண்டா?

உலகத்திலே பல பொருட்களையும் சொத்துக்களையும் சுதந்தரிக்க மனுஷன் இரவும் பகலும் பிரயாசப்படுகின்றான். இதனை கல்வி மூலமாகவோ, விளையாட்டு துறை மூலமாகவோ, அல்லது பல குறுக்கு வழியிலோ சம்பாதித்துவிடலாம் என எத்தனம் செய்கின்றான். அழிந்து போகின்ற உலக பொருட்களுக்கு அவ்வளவு முயற்சி. நீ உலகமெல்லாம் ஆதாயப்படுத்தி உன் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்தால் அதனால் வரும் பலன் என்ன? எப்போதாவது ஆன்மீக விடுதலையை குறித்து ஆழமாக சிந்தித்ததுண்டா? நீ நம்பியிருக்கும் நதி ஜீவதண்ணீருள்ள தெளிவான கண்ணாடிக் கடலிலே சேருமா?

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே: இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகின்றது. (1 தீமோ 2:4-6)

இந்த சத்தியம், இந்த விடுதலை, இந்த சமாதானம் உன்னில் திணிக்கப்படமாட்டாது, நீ அதை உன்னில் வரவேற்கவேண்டும்.

ஜீவதண்ணீருள்ள கடலில் சென்றடைய ஒரே வழி உண்டு! ஒரே சத்தியம் உண்டு! ஒரே ஜீவனும் உண்டு! அது இயேசுவிடத்தில் மட்டும் தான் உண்டு! நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் (யோவான் 10:9) என்று இயேசு உன்னை ஜீவதண்ணீருள்ள தெளிவான கண்ணாடி கடலில் பங்கடைய இன்று அழைக்கின்றார்!

இயேசு சொன்னார்:

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்: என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்கௗுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28)

குடும்பப் பிரச்சனைகள், உளவழுத்தம், தீராத நோய், மதுபானம் மற்றும் சொல்லமுடியாத அடிமைத்தன பழக்கங்கள் உங்களையோ அல்லது உங்கள் உறவினர் நண்பர்களையோ நாளாந்தம் வாட்டுகின்றதா? சமாதானம் இழந்த நிலையில் வாழ்கின்றீர்களா? உங்கள் வீட்டிலோ, மருத்துவ மனையிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ நாங்கள் உங்களுக்காக தனிப்பட இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கவிரும்பினால், இப்புத்தகத்தில் குறிப்பிட்ட தொலைபேசி இலகத்தில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

☎ 416.613.2909

ஜெபம்!

உங்கள் பிரச்சனைகளை சர்வ வல்லமையுள்ள தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்திருக்கின்ற கசப்பை என் மனத்தில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்யத குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். பரிசுத்த ஆவியானவரே இவை யாவற்றில் இருந்தும் விடுதலை பெற எனக்கு உதவி செய்யும்!

தேவனே, இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், இந்த நோயிலிருந்து, என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! கர்த்தாவே உம்மைப்போல் வேறொரு தேவனில்லை! உம்மை உண்மையாக தேடுகிறவர்கள் யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம்!

நீர் என்னுடைய ஜெபத்திற்கு பதில் தரப்போகிறதற்காக நன்றி! எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

நீதிமானின் சந்ததி!

ஏன் பிள்ளைகளிடம் பெற்றோரின் சாயல் தென்படுகின்றது? எப்படி சகோதரர்கள், சகோதரிகள் மத்தியில் சாயல் ஒத்திருக்கின்றது? சுருக்கமாக சொல்லப்போனால், பெற்றோரின் நிறமூர்த்தத்தில் (Chromosome) இருந்து பெற்றோரின் குணாதிசயங்களை (Traits) பிள்ளைகள் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள், இது பாரம்பரிய அடிப்படை (Basis of Heredity) எனப்படும். பெற்றோர் யாவரும் தங்கள் பரம்பரை சுகதேகிகளாகவே இருக்கவேண்டும் என விரும்புகின்றார்கள்.

சிலர் தங்கள் இளம் பிராயத்திலிருந்தே பிரயாசத்துடன் கல்வி கற்று, சிறப்பான வேலைகளை செய்து, தராளமாக பணத்தை சம்பாதித்து, வசதியாக வாழ வேண்டும் என கடும் முயற்சி எடுக்கின்றார்கள். இவர்களுள் பலர் தங்கள் முயற்சியில் வெற்றி பெற வாழ் நாள் முழுவதும் அயராது உழைக்கின்றார்கள், செல்வம் தாராளமாக புரளும் நாட்கள் வரும் போது, அவர்களின் வாழ்கையின் முடிவு நாட்களும் சமீபித்து விடுகின்றது. செல்வத்திரட்சியினால் சமாதானமான வாழ்க்கையை வாழமுடியும் என்று ஆரம்பிக்கும் பலர், முடிவிலே சமாதானத்தை இழந்த செல்வந்தர்களாக காணப்படுகின்றார்கள். இவர்கள் சேர்த்துவைத்த செல்வம் அவர்களுடைய பிள்ளைகளிடம் சேருகின்றது.

சிறப்பாக வாழ்கையை நடத்திய பெற்றோர் மற்றும் மூதாதையோர் நற் பெயர்கள் அவர்கள் சந்ததியைத் தொடர்கின்றது. நான் அந்த பிரபல வைத்தியரின் பேரன். அல்லது நான் இந்த பள்ளிக்கூட அதிபரின் மகள் என்று பெருமையாக சொல்லிக்கொள்வார்கள். இதுவும் பெற்றோரால் வந்த சுதந்திரமாக பிள்ளைகளிடம் சேருகின்றது.

தங்கள் உடல் நலத்தை நன்றாக பேணிப்பாதுகாத்து, கட்டுமட்டாக ஆரோக்கியமான வாழ்கை நடத்திய சந்ததியினருடைய பிள்ளைகளும் பொதுவாக சுகதேகிகளாகவே இருக்கின்றார்கள். சிலர் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்று இதையும் தங்கள் பெற்றோரிடமிருந்து ஒரு நன்கொடை போல பெற்றுக்கொள்கின்றார்கள். இக்காரியங்கள் யாவும் ஒரு வாழ்கைவட்டத்தில் சந்ததி சந்ததியாக வாழையடி வாழையாக நடைபெற்றுகொண்டே செல்கின்றது.

இதன் மறுபக்கத்தில் சில பெற்றோர் தங்கள் பெயர்களை பலவிதமாக தகாத செயல்களால் குலைத்து, தங்கள் ஆரோக்கியத்தை கெட்ட பழக்கங்களால் கெடுத்து, அநியாயமான முறையில் பொருட்களை சம்பாதித்து, பல இடங்களில் கடன்களை பெற்று, பெரும் பழுவை விட்டுச்செல்கின்றார்கள். இவைகளும் பெற்றோரால் வந்த சுதந்தரமாக தங்கள் சந்ததிக்கு சேருகின்றது.

பெற்றோரின் செல்வம், சுகம், நற்பெயர், ஆசீர்வாதம் ஏன் எனக்கு வரவேண்டும், அவை வேறுயாருக்கும் சென்றடைந்திருக்கலாமே என்று எந்த பிள்ளைகளும் சொல்லிக்கொள்வதில்லை. ஆனால் பெற்றோரின் கடன், அவப்பெயர், நோய்கள், சாபம் தங்களை தொடரும்போது மட்டும் பெற்றோர் செய்த குற்றத்தின் விளைவு ஏன் என்னை தொடர வேண்டும் எனவும் இதில் ஒரு அர்த்தமும் இல்லை என்றும் சொல்லிக் கொள்வார்கள். நீ சேர்த்து வைப்பதெல்லாம் உன் சந்ததிக்கு என்றால், இன்றிலிருந்து நீ உன் சந்ததிக்கு நல்ல சுதந்திரங்களை விட்டு செல்ல ஆரம்பிக்க வேண்டும்.

பரம்பரை சுகாதாரத்தை கெடுக்கும், குடிவெறி, புகைபிடிக்கும் பழக்கங்கள், குடும்ப நற்பெயரைக் கெடுக்கும் அநியாயமான சம்பாத்தியம், மோக பாவம், களவு, பொய், கொலை, வாழ்கையை கெடுக்கும் மனமேட்டிமை, பெருமை, அகந்தை, கீழ்படியாமை யாவையும் களைந்துவிடவேண்டும். இவைகள் மாத்திரம் ஒரு மனிதனையும் நீதிமானாக்க முடியாது. மனிதனிடம் உள்ள ஜென்ம பாவ வித்தை நற்காரியங்களால் பரிகரிக்க முடியாது.

அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை: உணர்வுள்ளவன் இல்லை: தேவனைத் தேடுகிறவன் இல்லை: எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்: நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழியிலிருக்கிறது: சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்: அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வமில்லை, என்று எழுதியிருக்கிறதே. (ரோமர் 3)

துன்பமோ, இன்பமோ, துயரமோ. தொல்லையோ, உயர்வோ, தாழ்வோ எதுவந்தாலும் நீதிமானின் சமாதானம் கெடுக்கப்படுவதில்லை. நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருக்களைப்போல் செழித்திருப்பார்கள். (சங்கீதம் 92:12) தாவீது என்னும் ஒரு பெரிய அரசன் “நான் இளைஞனாயிருந்தேன் முதிர்வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை” (சங்கீதம் 37: 25) என்று கூறினார். நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகின்றார் (சங்கீதம் 34:17)

யார் அந்த நீதிமான்? எப்படி இந்த பாவ உலகத்திலே பாவ வித்துடன் பிறந்த மனிதன் நீதிமானாக முடியும்? இலவசமாய் தேவனுடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்றார்கள்.

மறுபிறப்பு அனுபவம் உண்டா?

யூதருக்குள்ளே பரிசேயர் எனப்பட்ட மதப்பிரிவினரின் மாயமான சுயநீதியுள்ள வாழ்கையை இயேசு மிகவும் கண்டித்து வந்தார் ஏனெனில் பொதுவாக பரிசேயரில் பலர் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராக இருந்தார்கள்.

ஒரு நாள் நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் இராக்காலத்திலே இயேசுவிடம் வந்து:

நிக்கொதேமு: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.

இயேசு: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்றார்.

நிக்கொதேமு: ஒரு மனிதன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.

இயேசு: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்றார்.

உலகத்திலே பிறந்த மனிதன் எப்பவுமே இவ்வுலகத்திற்கு ஏற்றபிரகாரம் சிந்திக்கின்றான். வீட்டைப் பெருக்கி, தலை முழுகி, புத்தாடை அணிந்து, புண்ணியம் செய்வதாலோ தன் சரீரத்தை தான் வருத்துவதாலோ, நாடு விட்டு நாடு சென்று சில இடங்களை அல்லது மனிதர்களை தரிசித்து பிராயச்சித்தம் செய்து தூய்மை அடையலாம் என சிந்தித்து செயற்படுகின்றான். மனிதனுடைய பிரயாசம் அற்ப பிரயோஜனத்தைத் தரும், ஆனால் ஆன்மீக விடுதலையைத் தருவதில்லை. இந்த வாழ்கையை நழுவவிட்டால் அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம் என சிந்திக்கின்றான். மனிதனுக்கு ஒரே ஒரு பிறப்புத்தான் உண்டு, மரணமடைந்தபின் அவன் நியாயத்தீர்ப்பு நாளில்

தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும், ஆகையால் இந்த வாழ்கையிலே ஒவ்வொரு மனிதனுடைய சுயரூபம் அவன் உயிரோடிருக்கும்போதே மாற வேண்டும், ஒவ்வொரு மனிதனும் தேவ சாயலை அணிய வேண்டும். எப்படி ஒரு மனிதன் இந்த பாவ உலகத்திலே பரிசுத்தம் அடைய முடியும்? எப்படி ஒரு மனிதனின் சுயம் சாம்பலாகி, பழைய வாழ்கை மாறி ஒரு புதிய வாழ்வை வாழ முடியும். இந்த காரியத்தை ஒருவரும் தங்கள் சொந்த முயற்சியால் மட்டும் செய்யமுடியாது, அப்படியானால் இவை எப்படி ஆகும்?

இதை இஸ்ரவேலின் போதகனாயிருந்த நிக்கொதேமுக்கு கூட புரிந்து கொள்ள கடினமாயிருந்தது. அவன் இவைகள் எப்படி ஆகும் என்று இயேசுவிடம் கேட்டான்.

இயேசு சொன்னார் பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. ஆகையால் பரலோகத்தை தரிசிக்காத எவரும் பரலோகத்திற்கு சென்றடையும் வழியை காட்ட முடியாது. இயேசுவையல்லாமல் வேறு எந்த முயற்சியினாலும் ஒருவன் ஆன்மீக விடுதலை அடையமுடியாது.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

பரலோகத்தில் இருந்து இறங்கி வந்த இயேசு, தம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுத்து, எங்களுடைய பாவங்கள் யாவையும் தான் சுமந்து, பரிகரித்து, மரித்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து மறுபடியும் பரலோகத்திற்கு சென்றார். நாங்கள் பரலோகம் சென்றடையும் வழியை எமக்கு வகுத்துத் தந்துள்ளார்.

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். (ரோமர் 8: 5)

மனந்திரும்பி இயேசுவிடம் நீ வந்தால் அவர் உன்னை ஆவியினாலும் ஜலத்தினாலும் மறுபடி பிறக்கச்செய்து, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகச்செய்வார். (ரோமர் 12).

ANNUAL CONVENTION - 2014

வருடாந்த கன்வென்ஷன்

(ஆவணி 1-3)

AUGUST 1st TO 3rd

FOR MORE INFORMATION

www.gtachurchnet.ca ☎ 416.613.2909

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH